**Deposition of witness**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR**

| | | |
|---|---|---|
| O.S.No. | : | 496/2012 |
| Deposition of Witness for | : | DW2 |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | திரு.பழனிச்சாமி |
| Father's name | : | திரு.குழந்தைவேல் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of of the 9th Day of February 2026.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 6ம் பிரதிவாதி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. எனக்கு கிரையம் கொடுத்த கண்ணன் என்பவர் பெயரில் உள்ள 13.03.2008 தேதிய கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நான் 21.11.2014ம் தேதி கிரையம் வாங்கியதற்கான கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது பெயரில் உள்ள சொத்து வரி ரசீது **பி.வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

1) நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அசல் வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் கண்ணன் என்பவரிடம் நான் கடை வாங்கியுள்ளேன். அந்த இடத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்து நாராயணபுரம் மெயின் ரோட்டில் உள்ளது. நான் தற்போது கீழக் கைலாசபுரத்தில் குடியிருக்கேன். இதற்கு முன்பாக நாராயணபுரத்தில் தாவா சொத்திற்கு அருகில் வசித்து வந்தேன். 1ம் பிரதிவாதியின் கணவர் மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனார் அங்கமுத்துவை எனக்கு தெரியும். நான் 21.11.2014ம் தேதி தாவா சொத்தை கிரையம் வாங்கினேன். இந்த வழக்கில் அங்கமுத்து என்பவரது மனைவி மற்றும் குழந்தைகள் பிரதிவாதிகள் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு 2012ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. இந்த வழக்கு நிலுவையில் உள்ள விவரம் தெரிந்து தான் நான் தாவா சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் இல்லை. ஏற்கனவே மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பானது.

2) அங்கமுத்து என்பவர் வாதியிடம் வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்தம் போட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அங்கமுத்து இறந்தபின்பு அவரது மகள் அன்னமயில் வா.சா.ஆ.4 கிரைய ஒப்பந்தம் நீட்டிப்பு ஆவணம் எழுதிக் கொடுத்தது எனக்கு தெரியாது என்றால்

சரிதான். வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் குறித்து எனக்கு நேரடியாக எந்த விவரமும் தெரியாது என்றால் சரிதான்.

3) தாவா சொத்து சம்மந்தமாக அசல் பத்திரங்கள் வாதி வசம் இருந்து அதை ஒப்படைத்துதான் கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் கண்ணன் என்பவரிடம் கிரையம் பெற்றப்போது அசல் கிரைய ஆவணத்தை கேட்டேனா என்றால் அவருக்கு பதிந்து கொடுத்த ஆவணத்தை என்னிடம் கொடுத்தார். அங்கமுத்து என்பவரை நான் நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள கையெழுத்து அங்கமுத்துவின் கையெழுத்து என்றால் தெரியாது. அங்கமுத்து எனது குடும்ப நண்பர் என்றால் எனது கடைக்கு பக்கத்து வீட்டுக்காரர். வா.சா.ஆ.3ல் கையெழுத்து அங்கமுத்துவின் கையெழுத்து என்று எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்று வா.சா.ஆ.3 சொல்லுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

4) OS 96/2008 வழக்கின் நடவடிக்கைகள் எனக்கு தெரியாது. EP No.43/2010 வழக்கின் நடவடிக்கைகள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள வழக்கு நடைமுறைகள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் 5ம் பிரதிவாதியால் தயார் செய்யப்பட்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிக்கு அங்கமுத்து என்பவர் வா.சா.ஆ.3 கிரையம் ஒப்பந்தம் செய்து கொடுத்த விவரம் தெரிந்தும். அதேபோல் வா.சா.ஆ.4 கிரைய ஒப்பந்த நீட்டிப்பு ஆவணம் விவரம் தெரிந்தும் வழக்கு நடவடிக்கைகள் விவரம் தெரிந்தும் நானும் 5ம் பிரதிவாதியும் கூட்டு சதி செய்து கிரையம்

வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கில் எங்களுக்கு எந்த எதிர்வாதமும் இல்லை என்றால் சரியல்ல.

5) பி.வா.சா.ஆ.6 மற்றும் பி.வா.சா.ஆ.7 ஆவணங்கள் சான்றிட்ட நகல் தான் தாக்கல் செய்துள்ளோம் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.8 2025–2026க்கான சொத்து வரி ரசீது அசல் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8வழக்கிற்கு பின்பு உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் நாங்கள் தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றாலும் வாதியின் அனுபவத்திலேயே தாவா சொத்து உள்ளது என்றாலும் சரியல்ல. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுமென்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.